# பாரதியார்

# பல்கலைக் கழகக்
# கலை அறிவியல் கல்லூரி

வால்பாறை - 642 127

## தகவல் அறிக்கை
## 2006-07



# தகவல் அறிக்கை

குறிப்பு :1. இத்தகவல் தொகுப்பை கவனமாகப் படித்தபின் விண்ணப்பத்தை நிரப்புக.
2. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி தேதி <u>13.09.2006</u>
3. அறிவிக்கப்பட்டிருக்கும் கடைசித் தேதிக்குள் விண்ணப்பம் முதல்வருக்கு கிடைக்குமாறு அனுப்பப்பட்டுக் கல்லூரி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

## பகுதி 1:மாணவர் சேர்க்கை தொடர்பான விதிமுறைகள்

### பட்டவகுப்பில் சேருவற்கான தகுதிகள்:

1. மேல்நிலைப்பள்ளி இறுதி ஆண்டுத் தேர்விலோ அதற்கு இணையானதாக பாரதியார் பல்கலைக் கழகம் ஒப்புக்கொள்ளும் பிறதேர்விலோ தேறி இருக்க வேண்டும்
2. மதிப்பெண் சான்றிதழ் அரசு தேர்வு இயக்குநரின் பரிசீலனைக்கு உட்பட்டது. மதிப்பெண் சான்று போலியானது என்று அறியப்பட்டால் சேர்க்கை ரத்து செய்யப்படுவதுடன் குற்றவியல் நடவடிக்கை தொடரப்படும்.
3. ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

### விண்ணப்பப் படிவம் பெறுதல்

4. விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற இளநிலை பட்டவகுப்பு விண்ணப்பக் கட்டணம் ருபாய் 25/- மற்றும் பதிவுக் கட்டணம் ருபாய் 2/- செலுத்த வேண்டும்.
5. விண்ணப்பப்படிவம் அஞ்சலில் பெற இளநிலை பட்டவகுப்பு விண்ணப்பக் கட்டணமாக ரூ.27க்கான வங்கி வரைவுடன் சுயமுகவரியுடன் ரூ.15க்கான அஞ்சல் தலை ஒட்டி 25 X 12 செ.மீ. அளவு உறையுடன் எந்த வகுப்புக்குரிய விண்ணப்பப்படிவம் தேவை என்பதை தவறாமல் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மாணவர்கள், தங்களது சாதிச் சான்றிதழைக் காண்பித்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. இணையதளத்தின் மூலம் விண்ணப்பம் பெற வேண்டுவோர் பாரதியார் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.b-u.ac.in) இருந்து பெற்றுக்கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் ருபாய் 27/-க்கான வங்கி வரைவோலையை விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

குறிப்பு :-

7. முதல்வர் அறிவிக்கும் தேதியன்றோ அதற்கு முன்னரோ விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதிக்கு பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவு எண் தரப்படும். இப்பதிவெண்ணை மாணவர் சேர்ப்பு பற்றிய கடிதப் போக்குவரத்தில் குறிப்பிடவேண்டும். பதிவெண் அறிய விரும்புவோர் சுய முகவரியுடன் போதிய அஞ்சல் தலையுடன் அட்டை இணைத்தால் பதிவு எண் குறிப்பிட்டு அனுப்பப்படும்.

9. போதிய தவகல்கள் இல்லாத விண்ணப்பங்கள் ஏற்கப்படா.

10. உடல் ஊனமுற்றோர் / விளையாட்டு சிறப்புத் தகுதி / முன்னாள் ராணுவத்தினருக்குரியதென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தங்கள் தகுதிக்குரிய சான்றிதழ்களின் நகல்களைக் கட்டாயமாக விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். இல்லையெனில் அந்த இடங்களுக்கு விண்ணப்பங்கள் பரிசீலக்கப்படமாட்டாது.

11. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட நேர்காணல் கடிதம் காத்திருப்போர் பட்டியல் கடிதம் ஆகியவற்றில் உரிய அஞ்சல் தலை ஒட்டி சுய முகவரி எழுதப்பட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**சேர்க்கை:**

12. தெரிவு செய்யப்பட்ட மாணவரின் தற்காலிகப்பட்டியலில் வெளியிடப்படும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்படும். குறிப்பிட்ட நாளிலும், நேரத்திலும் முதல்வரை நேரில் காணமவில்லையென்றால் தமக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை இழந்து விடுவார்.

13. முதல்வர் ஒப்புப்பெற்றதும் குறித்த நாளிலும், நேரத்திலும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இல்லையெனில் அளிக்கப்பட்ட இடத்தை இழப்பர்.

14. நேர்காண் நிகழ்வின் போது தரவேண்டிய மூலச் சான்றிதழ்கள் **(Original certificates)** மற்றும் நகல்கள்

    1. நேர்காண் அறிவிப்பிதழ் (Interview card)
    2. மதிப்பெண் பட்டியல் (Mark sheet) 5 (Xerox)
    3. மாறுதல் சான்றிதழ் (Transfer Certificate)+ 3 நகல்கள்
    4. நடத்தை சான்றிதழ் (Conduct Certificate) + 3 நகல்கள்
    5. சாதிச் சான்றிதழ் (Community Certificate)+ 3 நகல்கள்
    6. நிழற் படம் (Recent Stamp size colour Photo 2 copies)

முக்கிய அறிவிப்பு : முன்பே படிகள் எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துதல்:

15. கல்லூரியில் சேரும்போது தரப்படும் மூலச்சான்றிதழ்கள் எக்காரணம் கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டா. எக்காரணத்திற்காவது அவை தேவைப்படுமெனக் கருதினால் தேவையான சான்றொப்பமிட்ட படிகளை முன்பே போதிய அளவு எடுத்துக்கொள்ள வேண்டும். கல்லூரியில் தந்த பிறகு நகல் எடுப்பதற்குக் கூட மூலச்சான்றிதழ்கள் தரப்படமாட்டா.

16. இக்கல்லூரியிலோ அல்லது பிறகல்லூரியிலோ இளநிலை முதலாண்டு பயின்று படிப்பைத் தொடராமல் இடையில் விட்டவர்களுக்கு, இக்கல்லூரியில் முதலாமாண்டில் சேர்க்கை, சேர்க்கைக் குழுவின் பரிசீலனைக்கும், தீர்மானத்திற்கும் உட்பட்டது.

17. **உடனடிச் சேர்க்கை (Spot Admission)**:
உடனடிச் சேர்க்கை வேண்டும் மாணவர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்களுடன் கல்லூரி முதல்வர் அவர்களை வால்பாறை தாற்காலிகக் கல்லூரி அலுவலகத்தில் (பொதுப் பணித்துறை விருந்தினர் இல்லம், வால்பாறை பழைய பேருந்து நிலையம் அருகில்) அணுகி உடனடியாகச் சேர்ந்து கொள்ளலாம். அல்லது பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகம் சென்று உடனடியாகச் சேர்ந்து கொள்ளலாம்.

## பகுதி – 2 பாடப்பிரிவுகள் (ஆங்கில வழி மட்டும்)

இக்கல்லூரியில் கீழ்க்கண்ட பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

| பாடவகுப்புகள் | பகுதி I | பகுதி II | பகுதி III முதன்மை பாடம் | துணைப் பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1.இளம் வணிக மேலாண்மை (BBM) | தமிழ் / மலையாளம் | ஆங்கிலம் | மேலாண்மை | மேலாண்மைக்கான கணிதம் மற்றும் வரிவிதிப்பியல் |
| 2. இளம் வணிகவியல் (B.Com) | தமிழ் / மலையாளம் | ஆங்கிலம் | வணிகம் | மேலாண்மைப் பொருளியல், வணிகம் தொடர்பான கணிதம் மற்றும் புள்ளியியல் |
| 3. இளம் கணிப்பொறி அறிவியல் ( B.Sc Computer Science) | தமிழ் / மலையாளம் | ஆங்கிலம் | கணிப்பொறியியல் | கணிதம் Operations Research and Bussiness Accounting |
| 4. இளம் வணிகவியல் கணிணி பயன்பாடு (B.Com.C.A.,) | தமிழ் / மலையாளம் | ஆங்கிலம் | வணிகம் | வணிக கணிதம் மற்றும் கணிணி பாடங்கள் |

## பகுதி - 3 கல்விக்கட்டண விகிதம்

**(கட்டண விகிதம் மாறுதலுக்குட்பட்டது)**

சேர்க்கை உறுதியான பின் ஒவ்வொரு மாணவரும் கீழ்க்கண்டவாறு பயிற்றுக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

| முதல் பருவம் | முதல் பருவம் | |
|---|---|---|
| | கலை | அறிவியல் |
| **கல்விக்கட்டணம்**** | 375/- | 500/- |
| **பிறகட்டணம்** | 755/- | 875/- |
| **மொத்தம்** | 1130/- | 1375/- |

** SC/ST மாணவர்களுக்கு கல்விக்கட்டணத்தில் முழுச்சலுகையும் BC/MBC மாணவர்களுக்கு அரைக் கட்டணச் சலுகையும் உண்டு.

<u>குறிப்பு</u> :

1. ஒவ்வொரு பருவத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவிற்குள் கல்விக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். கட்டணம் செலுத்தத் தவறினால் இழந்த வருகைப் பதிவு நாட்களை ஈடு செய்ய முடியாது.

2. **<u>பெற்றோர் ஆசிரியர் கழகம் : (Parent Teachers Association)</u>**
   பெற்றோர் ஆசிரியர் கழகம் மாணவர் சேர்க்கையின் போது ஆண்டு சந்தா ரூபாய் 50/- பதிவுக்கட்டணம் ரூபாய் 10/- மொத்தம் ரூபாய் 60/- செலுத்த வேண்டும். தொடர்ந்து கல்லூரியில் பயிலும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூபாய் 50/- செலுத்த வேண்டும்.

3. **<u>பெற்றோருக்குத் தனி வேண்டுகோள்</u>**
   பெற்றோர்கள் தங்கள் மகன் / மகள் வருகைப் பதிவு கல்வி முன்னேற்றம் முதலியவற்றை அறிந்து கொள்ள அவ்வப்போது கல்லூரி முதல்வரை நேரில் காணுமாறு வேண்டப்படுகின்றனர்.


முதல்வர்
பாரதியார் பல்கலைக்கழக,
கலை அறிவியல் கல்லூரி.
வால்பாறை – 642127.
Ph: 9443375329